சுப்பர்
சன்றே **பாட்டா**
இளைஞர்களின்
நகர நடமாட்டத்திற்குரிய
அனுயாச எழில்...
ஆண்களுக்கான இன்றைய
தெரிவு சுப்பர் சன்றே.
நகரில் தாராளமாகக்
கிடைக்கிறது.
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

# The EELA NADU

மலர்: 20 புரட்டாதி 7 ஷவ்வா: 19 இதழ்: 224
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-9-78

வெஸ்பா VESPA
உலகதரமிக்கது
இம்மாதம் முடிவில்
இறக்குமதியாகும்
ஸ்கூட்டர்களுக்கு
இன்றே பதிவு செய்யுங்கள்
எண்ணுக்கு ஏற்ற நிறம்...
மனதுக்கு ரம்மியம்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

### கல்குடாத் தொகுதி கூட்டணி வேட்பாளர்

# சம்பந்தமூர்த்தி நீதிமன்றத்தில் சரண்! செப். 26வரை றிமாண்ட்

## காசி, மாவை உட்பட 11 இளைஞர்களுக்கும் காலவரையின்றிக் காவல்

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கடந்த தேர்தலில் போட்டியிட்டவரும், புதிய அரசியலமைப்பு பிரகடன பகிஷ்கரிப்பு நடவடிக்கை தொடர்பாக கைதுசெய்யும்படி பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டு பொலிசாரால் தேடப்பட்டு வந்தவருமான திரு.சி. சம்பந்தமூர்த்தி நேற்று மட்டக்களப்பு மாஜிஸ்ரேட் நிதிமன்றத்தில் சரணடைந்தார்.

அரசுக்கு எதிராகச் சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா உட்பட 11 தமிழ் இளைஞர்களும் மீண்டும் நேற்றுக்காலை மட்டக்களப்பு மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு தொடர்ந்து காலவரையறையின்றி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 7ம் திகதி புதிய அரசியல் அமைப்பு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று இடம்பெற்ற பகிஷ்கரிப்புத் தொடர்பாகக் கைதுசெய்யுமாறு பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டிருந்த திரு. சம்பந்தமூர்த்தி நேற்று மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரண் அடைந்தபோதே இம்மாதம் 26ம் திகதி வரை அவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சி. மகேசுரா உத்தரவிட்டார்.

அரசுக்கு எதிராகச் சதிசெய்ததாகவும், கூட்டம் நடத்தி பொதுமக்களைத் தூண்டியதாகவும், பஸ்ஸுக்குக் கைக்குண்டு வீசியதாகவும் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா உட்பட 11 இளைஞர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் திரு. சம்பந்தமூர்த்தியும் 12வது சந்தேகநபராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இதை அடுத்தே நேற்று அவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்தார். (ம-இ)

### ஜனாதிபதி கமிஷனுக்கு எதிரான

## சிறிமா தாக்கல் செய்த மனு அக். 16-ல் விசாரணை

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல், அதிகாரதுஷ்பிரயோகம் ஆகியன தொடர்பாக விசாரணை செய்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தாக்கல் செய்துள்ள மனு தொடர்பான விசாரணைகள் மூன்று மேன்முறையீட்டு நீதியரசர்கள் முன்னிலையில் அடுத்த மாதம் 16ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதியரசர்கள் ஜி. ரி. விமலரத்தின, ஜனாப் அப்துல்காதர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவின் மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதியரசர்கள் மேற்கண்ட உத்தரவைவிடுத்தனர்.

ஜனாதிபதி கமிஷனுக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா ஏன் வழக்குத்தொடரக்கூடாது எனக் காரணம்காட்டி அடுத்தமாதம் 6ம்திகதிக்குமுன்

(6-ம் பக்க பார்க்கம்)

## கொழும்பு விசேட ஆணையாளர் காலமானார்

(கொழும்பு)

கொழும்பு விசேட ஆணையாளர் திரு, வி. ஏ. ஜெயசிங்கா தமது 58வது வயதில் நேற்று மாரடைப்பால் காலமானார்.

21 வருடங்கள் இவர்கொழும்பு விசேட ஆணையாளராகப் பதவி வகித்தார். (க)

## எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலும் சோதனை

(கொழும்பு)

பாராளுமன்றக் கட்டிடத்தில் வெடிகுண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் பாராளுமன்றக் கட்டிடத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயம் உட்பட மற்றும் பல காரியபலயங்களை சோதனையிட்டனர்.

புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனாப் பாக்கீர்மாக்சார் தமது தெரிவு பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி மாளிகைக்குச் செல்வதற்காக

(6-ம் பக்கம் பார்க்க)

# திட்டமிட்டபடி வேலைநிறுத்தம்!

## வடபிராந்திய தொழிற்சங்க கூட்டுக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

28ந் திகதி நடைபெறவிருக்கும் அடையாளப் பொதுவேலை நிறுத்தத்தில் சகல தொழிற்சங்கங்களையும் பங்குகொள்ளுமாறு வட பிராந்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு கேட்டுள்ளது. இக்குழு, பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 125ம் இலக்கச் சுற்றறிக்கையையும் நிராகரித்து, 28ந் திகதி திட்டமிட்டபடி வேலைநிறுத்தஞ் செய்வதென்று மீண்டும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைக்குழு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துடனும், தமிழ்த் தொழிற்சங்கங்களின் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பிரகாரம் அரசகரும மொழியால் வேலையிழந்தவர்களுக்கும், பதவி உயர்வு, சம்பள உயர்வு, வேலை உறுதிப்படுத்த மறுக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டுமென்ற கோரிக்கையை வட பிராந்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டுச்சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இக்கோரிக்கையை, வட பிராந்தியத் தொழிற்சங்கங்

(6ம் பக்கம் பார்க்க)

### வேலைநிறுத்தம் என்ற போர்வையில்

# இனக்கலவரத்தைத்தூண்ட முயற்சி நடைபெறுகிறது

## பாராளுமன்றத்தில் பிரதமர் 'பிரேமா' எச்சரிக்கை

(கொழும்பு)

''வேலைநிறுத்தத்தைச் சாட்டாக வைத்து, நாட்டில் இனக் கலவரத்தைத் தூண்டும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுள்ளதாக எனக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுச் சகலரும் வேலைக்கு வாருங்கள். கடந்த 7 ஆண்டுகளாக நீங்கள் அழித்துவிட்ட இந்நாட்டைப் புனரமைப்புச் செய்ய எமக்கொரு சந்தர்ப்பம் தாருங்கள்.''

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாச நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தோல்விகண்ட அரசியல்வாதிகள் மக்களுக்கு எதிராகத் தமது அரசியல் லாபத்துக்காகத் தொழிலாளர்களைப் பயன்படுத்தவே 28ந் தேதி அடையாள வேலைநிறுத்தம் செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வேலைநிறுத்தத்துக்கு அரசியல்காரணமில்லை என்று கூறுகிறுர்கள்.

● அரசியல் அமைப்பை மாற்றி அமைத்து திரு. ஜெயவர்த்தன சர்வாதிகாரியாகிவிட்டார்.

● 28ம் திகதி ஐ. தே. க. அரசை விரட்டி அடிப்போம்.

● ஏகாதிபத்திய வாதிகளுக்குவசதிஅளிக்கிறதுஇன்றைய அரசு.

இவ்வாறெல்லாம் வேலைநிறுத்தக்காரர்கள் தமது துண்டுப்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பிரபல கல்லூரிகளுக்கு அண்மையில் 2 பரப்புடன் வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. திருமதி சண்முகநாதன், 66, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0394

B. S. A. பன்ரம் மோட்டார் சைக்கிள் E. L. தொடர் பிலக்கமுடையது. விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஸ்ரீ திருப்பதி ஸ்டோர்ஸ், காங்கேசன்துறை. 0391

கலப்பற்ற அல்சேஷன் குட்டிகள் உண்டு. இனவிருத்திக்கான சிறந்த ஆண் நாய்களும் உண்டு. க. நடேசன், 15, மலர்மகள் வீதி' அரியாலை. 0395

குபேட்டா இரண்டு சில்லு ட்ருக்ரர் விற்பனைக்குண்டு. மணி மோட்டார் கரூச், ஊரிக்காடு 0397

### தேவை

கிண்ணியாவிலுள்ள மருத்துவ மனைக்கு (R. M. B) ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகிறார். சம்பளம் மற்றும் விடயங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும், ம நடராஜா, நம். 6, 2-ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0390

ஸ்ருடியோ நல்ல அனுபவம் வாய்ந்த டாக்ரூம், இன்டோர், அவுட்டோர் வேலைகள் தெரிந்தவர் தேவை. உடனே நேரில் வரவும். ரோன்சன் ஸ்ருடியோ, ஸ்ரேஷன் வீதி, சுன்னுகம். 0381

நல்ல சுற்றுடலில், மூன்று அல்லது நான்கு படுக்கை அறைகள் கொண்ட சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. யழ் நகரில் இருந்து நான்கு மைல் சுற்றுடலில பருத்தித்துறை வீதி, பலாலி வீதியில் உள்ளது விரும்பத்தக்கது. தொடர்பு: மனேஜர், ஹவுஸ் அன்ட் புரொப்பர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட், 3 நவீனசந்தை, யாழ்ப்பாணம். 0387

### பயிற்சி

(Electric & Gas) எலக்ரிக் காஸ்வெல்டிங், லேத் இயக்குநர் (Lathe operator) மூன்று மாதகால அடிப்படை பயிற்சி வகுப்புக்கள் அக்டோபர் மாதம் முதல் நடத்தப்படும். பயிற்சிக்காலத்தில் திறமையான தகுதியுடையோருக்கு பயிற்சியின் பின இலவசமாக தொழிற்சாலையில் மூன்று மாதகாலம் விசேட பயிற்சி அளிக்கப்படும்

அனுபவமிக்க பொறியியலாளாகள் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவார்கள். 30-9-78-ற்குமுன் விண்ணப்பிக்கவும். இன்டஸ்றியல் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், C/o ராதா மெஷின் கம்பனி, 95 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0375

24-9-78 ஞாயிற்றுக்கிழமை பாலர் ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகின்றது. 750 பாலர் ஆசிரியைகள் பயிற்சி பெற்ற வடபகுதியில் முதன்முதல் ஆரம்பித்த நிறுவனம் என்ற பெருமையுடன் இவ்வாண்டுப் பயிற்சி ஆரம்பமாகின்றது. G. C. E. சித்தியடைந்த பெண்கள் பயிற்சி பெறலாம். விபரங்களுக்கு: பாலர் ஆசிரியர் சங்கம், 3, பி. ஏ. தம்பி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 0388

### சேவை

உங்களுடைய எல்லாவித இறக்குமதி செய்யும் சரக்குகளை உடனுக்குடன் கவனித்து துறைமுகத்திலிருந்து பாதுகாப்பாக உங்கள் பண்டகசாலைக்கு கொடுப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும். இறக்குமதி செய்ய விரும்புவோர்க்கு ஆலோசனையும் வழங்கப்படும். சதாசிவம் வீரவாகு அன் கோ, 270, செட்டியார் தெரு, கொழும்பு 11, தொலைபேசி: 24481. 0393

## கேள்விப் பத்திரம்

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.

6000 (ஆறுயிரம்) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் ''பொது முகாமையாளர், ப. நோ கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 26-9-78-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 25-9-78-ந் திகதி பகல் 12-00 மணி வரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 250/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்.

பதில்பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை,
22-9-78. 0396

## வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தில் 12000க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கிருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் யாவும் 30-9-78-ந் திகதி காலை 10-00 மணிக்கு முன்னதாக பதவுத் தபால் மூலம் எமக்குக் கிடைக்ககூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

பதில்பொதுமுகாமையாளர்
கரவெட்டி,
21-9-78. 0392

## இன்று மேடையேறும் 'மயிலைக்குறவஞ்சி'

(யாழ்ப்பாணம்)

சோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினர் அளிக்கும் 'மயிலைக்குறவஞ்சி' நாட்டிய நாடகம் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா தம்பதிகள் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை மேடையேறுகிறது.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி திறந்தவெளியரங்கில் இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்ற இந்நிகழ்ச்சி இன்று மீண்டும் மேடையேறுகிறது.

திரு. என். வீரமணிஐயரின் இசையமைப்பிலும் சாகித்திய அமைப்பிலும் உருவான இந் நாட்டிய நாடகத்தை திருமதி ஞானமணி செல்லையா நட்டுவாங்கம் செய்கிறார்.

## இளம் பெண்ணும் 2 வாலிபர்களும் றிமாண்டில்

(பண்டத்தரிப்பு)

பஸ் தரிப்பு நிலையம் ஒன்றில் பட்டப் பகல் நேரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் இருந்ததாகக் குற்றம் சாட்டி சங்கானைப் பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட இரு வாலிபர்களும் இளம் பெண் ஒருவரும் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யட்பட்டபோது மூவரையும் இம்மாதம் 27 ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டைச் சந்தியிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்திலேயே இம்மூவரும் சங்கானைப் பொலிசாரினுல் கைது செய்யப்பட்டனர். (அ)

## சந்நிதிக்கந்தன் திருத்தலபுராண நூல்வெளியீடு

(இமையாணன்)

தொண்டமனுறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தன் திருத்தல புராணம் என்றும் நூல் மேற்படி செல்வச்சந்நிதி கோவில் திருவிழாவின்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

விழாவை தொண்டமனுறு செல்வச்சந்நதி இந்து கலாச்சார மாமன்றத்தினர் பிரபல வர்த்தகரான திரு. எஸ். வி. சுப்பிரமணியம் உதவியுடன் நடாத்தினர்.

இந்து கலாச்சார மாமன்றத்தின் தலைவர் திரு. ஆர். சிவதாஸ் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. அருட்கவி சி. விஞசித்தம்பிப்புலவர் ஆக்கிய மேற்படி நூலின் முதற்பிரதியை வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வை வேலும்மயிலும் பெற்று உரைநிகழ்த்தினர் அவர் உரைநிகழ்த்தும் பொழுது அருட்கவி விஞசித்தம்பியின் சேவையையும் தொண்டையும் பாராட்டிப் பேசினர். மற்றும் இந்து கலாச்சார மாமன்றத்தின் போஷகரும் தொண்டமனுறு கிராம சேவையாளருமான திரு பொ வேலுப்பிள்ளை உட்பட பலர் உரை நிகழ்த்தினர்கள். ஈ

## றிமாண்ட்

(சங்கானை)

வலி- மேற்குப்பிரிவில் சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் சுன்னுகம் யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் பகுதிகளில் நீண்டகாலமாக நடைபெற்றுவந்த சைக்கிள் களவு சம்பந்தமாகச் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை சிவபாதம் யாழ்ப்பணத்தைச் சேர்ந்த மொசமட் சமீம ஆகிய இருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனா.

சிவபாதத்தை அடுத்த மாதம் 4-ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி மற்ற சந்தேக நபரான சமீமை 500 ரூபா பிணையில் செல்லுமாறும் பிணைகட்டத்தவறினல் நவம்பர் 22-ம்திகதிவரை றிமாண்டில்வைக்கு மாறும் உத்தரவிட்டார். (அ)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

நயினதீவு மத்திய மகா வித்தியாலய உதவி ஆசிரியர் திரு. சி. க. தருமலிங்கம் பதவி உயர்வு பெற்று நயினதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிறந்த சமூக சேவையாளராவார். (கெ)

## குளத்தில் கிடந்தசடலம்!

### பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது

[மாவிட்டபுரம்]

அளவெட்டியிலுள்ள குளமொன்றினுள் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்ட சடலம், எவரும் உரிமைகோராமையால், அரசாங்கசெலவில் அடக்கம்செய்யப்பட்டதுடன், இதுதொடர்பாகநடந்தமரண விசாரணையில் பகிரங்க தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

அளவெட்டிதெற்கில் நீர்வற்றிக்கிடந்த குளமொன்றினுள் சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமொன்று கிடக்கக் காணப்பட்டதையடுத்து, சுன்னுகம் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்துமேற்படி சடலத்தை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று சவச்சாலையில் வைத்தனர்.

3 தினங்களாகியும் இவரை எவரும் அடையாளம் காட்டி உரிமைகோர முன்வராமையால் மரணவிசாரணை நடைபெற்றது.

பிரேதபரிசோதனை நடத்திய தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரத்தினம், மேற்படி காலமானநபரின் வயிற்றில் நஞ்சு இருந்ததாகவும், அதுவே மரணத்துக்குக் காரணம் எனவும்கூறி, தலையிலும், முகத்திலும்கண்டல்காயங்கள் இருந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி சடலம் கிடந்த இடத்தில் சாராயப்போத்தல் ஒன்றும், கிருமிநாசினிப்போத்தல் ஒன்றும் கிடக்கக் காணப்பட்டு மரணவிசாரணை அதிகாரி முன் சமர்ப்பிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம் மரணம் குறித்து பகிரங்க தீர்ப்பு வழங்கி சுன்னுகம் பொலிசாரை விசாரணைசெய்யுமாறும் உத்தரவிட்டார். சடலம் அரசாங்கசெலவில் அடக்கம் செய்யப்பட்டது.

## "பாராளுமன்றம் சென்று என்ன சாதித்தார்கள்?"

### -- தமிழ்க்காங்கிரஸ் தலைவர்

(யாழ்ப்பாணம்)

கடந்த பொதுத் தேர்தல் முடிந்ததும், பாராளுமன்றப் செல்லவேண்டாம் என்று கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் கூறினேன் ஆனல் எதிர்க்கட்சியாக வரும் வாய்ப்பை விடக்கூடாதென்று பாராளுமன்றம் சென்றனர். இதுவரை தமிழ் ஈழத்திற்காக எவ்வித நடவடிக்கையும் கூட்டணியினர் எடுக்கவில்லை.

இணுவிலில் நடந்த தமிழ்க் காங்கிரஸ்கருத்தரங்கில், தமிழ காங்கிரஸ் தலைவர் திரு. ரி சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பி. ஞானப்பிரகாசம் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது: கூட்டணியில் கடந்த 7 வருடங்களாக இருந்து தமிழ்ஈழக் கொள்கையை நம்பி உழைத்துவந்தேன். தேர்தலுக்குப்பின் கூட்டணி எம். பி க்களை பாராளுமன்றம் செல்லவேண்டாம் அது தமிழ் ஈழக் கொள்கைக்குமாறனது என்றேன். அவர்கள் கேட்கவில்லை. பாராளுமன்றம் சென்று இதுவரை அவர்கள் எதையும் சாதிததில்லை.

தமிழ்ஈழக் கொள்கையையும, தமிழ்ஈழ நடவடிக்கைகளையும், கூட்டணியினர் பின்போட்டிருக்கிருர்கள். ஆதலால் தமிழ்ஈழக் கொள்கையை கையாளும் வேளை கூடிய ஆதரவு கொடுக்கும் நோக்குடன் காங்கிரஸை பலப்படுத்துவோம்.

தமிழ் காங்கிரஸ் பொதச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னபபலம், ''புதய சட்டத்தின்கீழ் உபதேர்தல் இல்லாததினலை, கூட்டணியினர், துரோகிகள் பாராளுமன்றம் சென்றுவிடுவார்கள் என்று கூற இடமில்லையென்றும் மீண்டும் கூட்டணியினரையே பாராளுமன்றம் அனுப்பலாம் என்றும் கூறினர்.

திரு. ஆர். சுப்பிரமணியம், திரு. ச, மகேந்திரராசா ஆகியோரும் பேசினர்கள். (க)

## சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

ஆசிரியர்: ஏழாலை பண்டிதர் மு. கத்தையா B.A

வெளியிட்டோர்: மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம்.

விலை: ரூபா 5/-

கல்வியறிவுபடைத்த சைவர்கள் மத்தியில் இப்பொழுது சைவசமயத்தைப் பற்றியும் சைவக்கிரியைகள் பற்றியும் அறியவேண்டுமென்றும் ஆர்வம் பிறந்துள்ளது, இதனுல் சிற்சில இடங்களில் அறிஞர் கூடி சங்கங்கள் ஏற்படுத்தி சைவசமய வகுப்புக்கள் நடாத்தி வருகின்றனர். இப்படி ஏற்படுத்தப்பட்ட ஒரு சங்கமே மானிப்பாய் இந்து சமயவிருத்திச் சங்கமாகும். இச்சங்கத்தின் ஆதரவில் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா B. A. சைவசமயக் கிரியைகள் பற்றிச் சில சொற்பொழிவுகள் ஆற்றினர்கள். இச்சொற்பொழிவுகளே நூலாசத் தொகுக்கப்பெற்று ''சித்தாந்த விளக்கில் சைவக் கிரியைகள்'' என்னும் நூலாக வெளிவந்துள்ளன.

இந்நூலின் ஆசிரியர் இந் நூலை எழுதுவதற்குப் பல்லாற்ருலும் தகுதி வாய்ந்தவர். வடமொழி, தென்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். அதோடு சித்தாந்த சாத்திரங்களையும் சிவபுராணங்களையும் அருளானந்தசிவம் என்னும் ஏழாலை வைத்தியர் ஐ. பொன்னையா அவர்களிடம் பாடங் கேட்டவர். இப்படிப் பாடங் கேட்டதோடு அமையாது தாமாசவும் இவ்விஷயங்களை ஆராய்ந்துள்ளார். இவற்றுக்கு மேலாக பல இடங்களில் சித்தாந்த வகுப்புக்களும் பெரியபுராண வகுப்புக்களும் நடாத்திவருவதால் அவரின் அறிவு தெளிவடைந்துள்ளது.

சைவக்கிரியைகளைப் பொறுத்தவரையில் அவற்றைச் செய்வோருக்கும் (குருக்கள்மாருக்கும்) செய்விப்போருக்கும் அவைபற்றிய அறிவு மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இதறகுக் காரணம் போதிய நூல்களில்லாமையும், மக்களின் சிரத்தையின்மையும் சைவக்கிரியைகளின் விளக்கங்கள் எல்லாம் ஆகமங்களிலும் அவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட பத்ததிகளிலுமே காணப்படுகின்றன. இந்நூல்களெல்லாம் வடமொழியிலிருப்பதால் மக்கள் இவற்றைப்படித்து விளங்க முடியாது. சிவஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனுர் முதலியார் இவை பற்றி எழுதிய சிறு நூல்களும் இப்பொழுது கிடைப்பதற்கரிதாய் விட்டன.

பண்டிதர் கந்தையாவின் நூலின் சிறப்பு அம்சம், சைவக் கிரியைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவார்த்த விளக்கமாகும். சைவக்கிரியை

(6 ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
The Eelanaadu

## யாழ்ப்பாணத்தில் ஒலிபரப்பு நிலையம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முதல் இரண்டு பிரதேச ஒலிபரப்பு நிலையங்களும் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கிறதென்றும் தகவல் ஒலிபரப்புக்குப் பொறுப்பான ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ டி அல்விஸ் இதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிருரென்றும் வெளியாகியுள்ள செய்தி மகிழ்ச்சி அளிப்பதாகும்.

தமிழ் நாட்டில் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் என்று பல மாவட்டங்களில் ஒலிபரப்பு நிலையங்களிருக்கின்றன. இந்த நிலையங்கள் தனித் தனியாகவும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கின்றன. இந்த நிலையங்களில் ஒன்றில் தயாரித்தளிக்கப்படும் நிகழ்ச்சிகளை இதர நிலையங்கள் ஒலிபரப்பும். இதே சமயம் புதுடில்லியிலுள்ள மத்திய ஒலிபரப்பு நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளையும் இந்த நிலையங்கள் அஞ்சல் செய்கின்றன. மதுரையிலும்ஒரு ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையும் இப்போது வலுப்பெற்றுவருகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஒலிபரப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஒலிபரப்புக் கமிஷன்கள் முன்னிலையில் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. கொழும்பிலுள்ள ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை வடபகுதி மக்கள் தெளிவாகக் கேட்க முடியாதிருந்த நிலை மட்டுமே, மண்டைதீவில் நிறுவப்பட்டுள்ள நிலையத்தினல் நீக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதியிலிருந்துதான் சங்கீத வித்துவான்கள், மற்றும் வானெலிக் கலைஞர்கள் பெருமளவில் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்குக் கொழும்புக்குச் செல்கிறுர்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்பட்டால் இக்கலைஞர்கள் கொழும்புக்குச் செல்வதால் ஏற்படும் அசௌகரியங்கள் நீங்கி நிகழ்ச்சிகளும் நன்ருக அமைவதுடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் செலவுகளும் வெகுவாகக் குறைந்துவிடும்.

யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிப்பதுடன் நாட்டின் பொதுவான நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாண நிலையம் ஒலிபரப்பலாம்.

மண்டைதீவு நிலையம் அமைக்கப்பட்டதால் நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்கலாம் என்று எதிர்பார்த்த வடபகுதி மக்களுக்கு பெரும்பாலான நேரமும் வர்த்தக விளம்பரங்களையும் சினிமாப் பாடல்களையுமே கேட்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதுபோல, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் ஒலிபரப்பு நிலையமும் அமைந்துவிடக் கூடாது.

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 7-ந் திகதி
சனிக்கிழமை
(23-9-78)

**மேடம்:-** வாழ்க்கையில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். கடமையில் தடைகள் ஏற்படும். சிலர் கடன்படவும் நேரிடும் மதுபானத்தைத் தவிர்க்கவும்.

**இடபம்:-** அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். துன்பத்தின் சாயல் மனதிலேபடியும் சகாக்களின் விரோதத்தைத் சம்பாதிக்க நேரிடும். வேண்டுவது பொறுமையே.

**மிதுனம்:-** வீட்டில் சுப கருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

**கடகம்:-** சுற்று வட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. வாய்வுப் பதார்த்தங்களை தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கை பயன்தரும்.

**சிங்கம்:-** மதிநுட்பத்தின் மூலம் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவநிநாட்டமுண்டு.

**கன்னி:-** கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கலாம். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்கு செல்வாக்குப் பெருகும்.

**துலாம்:-** துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

**விருச்சிகம்:-** தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமைக்கிடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்ருேர்களின் ஆதரவும் கிடைக்கும். தொழில் துறையிலும் வெற்றியுண்டு.

**தனுசு:-** எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும் தொழில்புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காகலாம். நிதானம் நன்று.

**மகரம்:-** பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்குஇடமுண்டு. தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் கிடைக்கும். புண்ணியகாரியங்களில் மனம் நாடும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

**கும்பம்:-** வியாபாரத் துறையில் விருத்திக்கிடமுண்டு செய்தொழில் சிறப்படையும் வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

**மீனம்:-** இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். காதல்கணைதாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

எப்பொருளிலும் யாரிடத்திலும் ஒருபொழுதும் பற்றுதல் வையாதே.
—சுவாமி சிவானந்தர்

# ‘வீதிகளில் பொழுதுகழியாது நாட்டுக்கு உழையுங்கள்’

## கிராமத்து இளைஞர்களுக்கு மேலதிக அரசாங்க அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கிராமங்கள் பலவற்றைக் கொண்டதே நாடு. நாடு முன்னேறவேண்டுமானல் ஒவ்வொரு கிராமமும் முன்னேற வேண்டும். கிராமத்தின் இளைஞர்கள் வீதிகளிலும் சந்திகளிலும் நின்று வீண்பேச்சுப் பேசித் தம் நேரத்தையும் சக்தியையும் விரையமாக்காமல் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுழைத்தால் நாடு முன்னேறும். இந்த வகையில் மனமகிழ் மன்ற இளைஞர்களின் தொண்டு எல்லோராலும் பாராட்டப்படவேண்டிய தொன்ருகும்.'' இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் திறந்தவெளி அரங்கினைத் திறந்துவைத்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

மில்க்வைற் ஸ்தாபனத்தின் உதவியுடனும் பொதுமக்களின் நிதியுதவியுடனும் மனமகிழ்மன்ற இளைஞர்களால் நிர்மானிக்கப்பட்டுள்ள இவ்வரங்கின் திறப்புவிழா வித்தியாலய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

தொழிலதிபர் திரு. க. கனகராஜா குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்த இவ்விழாவின் புதிய வகுப்பறைகளைத் திறந்து வைத்துப் பேசிய சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராசநாயகம் கல்வித்துறையில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளுடன் போட்டியிடக்கூடிய நிலையில் இப் பாடாசாலை இருப்பதாகப் பாராட்டினர். கடந்த ஆறு ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்திற்கு இப் பாடசாலையிலிருந்து மாணவர்சள் தெரிவு செய்யப்பட்டுவருவதைச் சுட்டிக்காட்டிய அவர் கிராமத்திலுள்ள பெற்ருேர் எல்லோரும் தத்தம் பிள்ளைகளை இப் பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பதையே தமது இலட்சியமாகக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினர்,

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள் பேசுகையில் ‘தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்பு கொள்வதற்குப் புதிய அரசியற் திட்டம் வழிவகுத்திருக்கின்றது, ஆங்கில மோகத்தை விட்டு எல்லோரும் தமிழிலேயே கருமமாற்ற வேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

பெற்ருர் ஆசிரியர் சங்கத் துணைச் செயலாளர் திரு, ஈஸ்வரபாதமும் பேசினர்.

[அ[

## “தொண்டர் திலகம்”

ஏழ்ப்பாணம்)

''குட்டையிலே தேங்கிநிற்கும் நீரிற் கிருமிகள் பெருகும் அதனல் நோய்கள் பரவும். ஒருவரிடமோ ஓரிடத்திலோ பணம் தேங்கினலும் அதனல் எண்ணற்ற தீமைகள் உண்டாகும். இந்த உண்மையை உணர்ந்த திரு. கனகராஜா தம்மிடம் பணத்தைத் தேங்க விடுவதில்லை. நல்லமுறையில் நாணயமான முறையில் தாம் ஈட்டும் பணத்தைப் பொது நன்மைக்காக அள்ளி அள்ளி வழங்குகிருர் மில்க்வைற் அதிபர் திரு.க.கனகராஜாவுக்கு ‘தொண்டர்திலகம்’ என்னும் பட்டம் சூட்டப்பட்டதை யொட்டி நிகழ்த்திய சொற்பொழிவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பட்டம் சூட்டுவதனல் அவருக்குப் புதிய புகழோ புதிய பெருமையே ஏற்படப் போவதில்லை. நல்லவை செய்பவரைப்பாராட்ட வேண்டும் நன்றி தெரிவிக்க வேண்டும் இந்த நற்செயலை மற்றையோர் பின்பற்ற வேண்டும் என்பவற்றை நினைவூட்டவே பட்டத்தை சூட்டுகின்ருேம். என்ருர். ''தொண்டர் திலகம்'' என்னும் கௌரவப் பட்டம் உசன் மனமகிழ் மன்றத்தினரால் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றிதழை விழாவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. என்.வி. ஜெகநாதன் திரு. கனகராஜாவுக்கு வழங்கினர்.

(உ)

## “பொற்கிழிப்பதிக வெளியீடு: ஒரு ஞானதானம்”

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப் பதிமுருகன் ஆலயத்தில் சென்றவாரம் பேருரை நிகழ்த்தி வந்த கலாநிதி திருமுருக கிருபானந்தவாரியார், திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பொற்கிழிப்பதிகப்பிரசுரத்தைவெளியிட்டுவைத்தார்.

இப்பிரசுரம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தைச் சேர்ந்த திரு. சி. கிருஷ்ணமூர்த்தியால் பதிப்பிக்கப்பெற்ற 3-வது பிரசுரமாகும்.

இப்பிரசுரத்தைப் பெற்றுக் கொண்ட வாரியார் உரையாற்றுகையில் இவ்வாலயத்தில் கந்தபுராணவிரிவுரை நிகழும்போது, ஞாபகார்த்தமாக இலவச வெளியீடாக ‘பொற்கிழிப்பதிகம்’ என்னும் இந்நூலை வெளியிட்டு ஞானதானமாக வழங்குவதையிட்டு மகிழ்கின்றேன், நூலைப்பதிப்பித்த திரு கிருஷ்ணமூர்த்தி சிரஞ்சீவியாக - ஞானவானுக வாழவேண்டுமென்று வயலூர் முருகப்பெருமானை வேண்டுகின்றேன்'' என்று வாழ்த்தினர்.



பொற்கிழிப்பதிக வெளியீட்டாளரை வாரியார் வாழ்த்துகிருர்

முதற்பிரதியை ஜிந்துப்பிட்டித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ீதவஸ்தான திருமுறை செம்மல் வெ அண்ணுமலை, வாரியாரிடமிருந்து பெற்று, பதிகங்களைப் பாடினர். 2-வது பிரதியை சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளையும், 3வது பிரதியை கலாநிதி ச. பொன்னம்பலமும் பெற்றுக் கொண்டனர்.

(ஈ)

## தவறணை தீக்கிரை

(பண்டத்தரிப்பு)

பெரிய விளான் சந்திக்கு சமீபமாகவிருக்கும் கள்ளுத் தவறணை நள்ளிரவு நேரத்தில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இத்தீவைப்பு இனம்தெரியாத விஷமிகளின் செயலாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. இத்தீவைப்பு சம்பவம் குறித்து சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# தொழிலாளர் வேலை நீக்கம்:

## தொழிற்சங்கத்தில் சேரமுயன்றனராம்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கததில் சேர முனைந்த தொழிலாளர்கள் தொழிற்சாலையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த தொழிற்சாலையொன்றில் வேலை பார்த்த தொழிலாளர்களில் சிலர் தொழிற்சங்கமொன்றில் சேர்ந்து தங்களது உர்மைகளைப் பாதுகாக்க முனைந்தனர். இதைத் தொடர்ந்து 4 ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இதனல் ஆத்திரமுற்ற வேறு தொழிலாளர்களும் தொழிற்சங்கத்தில் சேரமுயன்றபோது நிர்வாகம் அவர்களுக்கு எதிராக புதிய நிபந்தனைகளை விதித்ததாம்.

அந்நிபந்தனைகளில் கையெழுத்திடாத 14 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

இதையடுத்து தொழிற்சங்கமொன்றின் தலையீட்டால், யாழ்ப்பாணம் தொழில் திணைக்களம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு உத்தியோகத்தரை அனுப்பி நடவடிக்கைஎடுத்து வருகிறது.

(கூ)

## அடையாள அட்டை யாருடையது?

யாழ்ப்பாணம் நீராவியடி கேணிக்கருகில் வீதியில் கிடந்து கண்டெடுக்கப்பட்ட கந்தையா தர்மராஜா என்பவரின் அடையாள அட்டை ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# "சட்டசபையைக் கூட்டுமாறு கேட்க ஆளுநருக்கு அதிகாரமில்லை"

## புதுச்சேரி முதல்வர் அறிவிப்பு

**புதுடில்லி, செப்.22 சட்டசபையைக் கூட்டுமாறு லெப்டினன்ட் கவர்னர் குல்கர்ணி கோரியிருப்பது சட்ட விதிகளை மீறுவதாக உள்ளதுஎன்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. எஸ்.இராமசாமி தெரிவித்திருக்கிறார்.**

இதுபற்றி அவர் சபாநாயகருக்கு எழுதிய கடிதமொன்றில் கூறியிருக்கிறார்.

சபாநாயகர் திரு. காந்தி இதுபற்றி நிருபர்களிடம் தெரிவிக்கையில், ஆளுநரின் உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு தாம் ஆளுநரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### குல்கர்ணி கருத்து

குல்கர்ணி நிருபர்களிடம் கருத்துவெளியிடுகையில் யூனியன்பிரதேசத்தில் தமக்குரிய சிறப்புரிமை இதுஎன்றும் தாம் மத்தியஅரசுடன் கலந்தாலோசனை செய்தபின்னரே சட்டசபையைக்கூட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### முதலமைச்சர் விஜயம் ரத்து

இதேவேளை புதுடில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டிற்கான தமது விஜயத்தை முதலமைச்சர் திரு. இராமசாமி ரத்துச்செய்துள்ளார். [உ]

## 34வது வருடப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சூரியோதய சனசமூகநிலைய 34வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல், சூரியோதய ஐக்கிய நெசவாளர் சங்க நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. எம். கே. இளையப்பு தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில்கோப்பாய் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு.ஜே.எஸ்.எஸ்.ஆனந்தன், யாழ். மாவட்ட ச. ச. நிலைய மேற்பார்வையாளர் திரு. வி. கிருஷ்ணசாமி, அ. இ. திருவள்ளுவர் மகாசபை செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் உட்படப் பலர் உரையாற்றுவர். (ஈ)

காம்ப்டேவிட் உடன்பாடு:

## அமெரிக்காவுடன் ஆலோசிக்க சவூதிஅரேபியா இணக்கம்

வாஷிங்டன்,செப். 2 காம்ப்டேவிட் உடன்படிக்கை தொடர்பாக அமெரிக்காவுடன் ஆலோசனை நடத்துவதென சவூதிஅரேபியா முடிவு செய்துள்ளது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வான்ஸ் சவூதி அரேபிய மன்னர் காலித்தையும் முடிக்குரிய இளவரசரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய தனையடுத்து மேற்படி முடிவு அறிவிக்கப்பட்டது.

மன்னருடன் 30 நிமிடங்களும் இளவரசருடன் இரண்டு மணித்தியாலங்களும் திரு. வான்ஸ் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தமதுஇருநாள் விஜயத்தை சவூதிஅரேபியாவில் முடித்துக்கொண்டு திரு. வான்ஸ், டமாஸ்கஸ்செல்ல விருக்கிறார்.

## செய்தி பற்றிய விவரம் வெளியிட மறுத்த நிருபருக்கு சிறை!

வாஷிங்டன்,செப்.22 தாம் பெற்றசெய்தி ஒன்று பற்றியவிபரத்தை வெளியிட மறுக்க 'நியுயோர்க்டைம்ஸ்' பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஆஸ்பத்திரி ஒன்றில் ஏற்பட்ட மரணங்கள் பற்றிய செய்தியை எவ்வாறு பெற்றார் என்ற தகவலை வெளியிட மறுத்ததாலேயே பிரஸ்தாப நபருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பிராஸ்தாப பத்திரிகைக்கு எதிராகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (உ)

உதைபந்தாட்டம்:

## இன்று-நாளைய மோதல்கள்

[யாழ்ப்பாணம்]

'யாழ். உதைபந்தாட்ட லீக்'கின் ஆதரவில், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய மோதலில் யாழ். முஸ்லிம்விளையாட்டுக்கழகமும்,புனிதவளன் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. நாளைய மோதலில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், குருநகர் பாடும்மீன் கழகமும் மோதுகின்றன.

## 42 உழவு யந்திரங்கள் வழங்கப்பட்டன

(மட்டக்களப்பு)

விவசாய விருத்தியைக்கருதி மண்முனை மேற்குப் பிரிவில், இவ்வருடம் 42 உழவு யந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவலை மேற்படி பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு சொர்ணவடிவேல் பெரும்போகச் செய்கைக்கான விவசாய மாநாட்டில் தெரிவித்தார்.

## நுண்கலைமன்ற இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நுண்கலை மன்றத்தின் இம்மாத நிகழ்ச்சியை அடுத்த மாதம் 14-ம் திகதி சனிக்கிழமை நடத்துவதெனமுடிவு செய்யப்பட்டுள்ளது அன்று மாலையாழ். றிம்மர்மண்டபத்தில்செல்விகௌரி பொன்னுத்துரையின் இசை நிகழ்ச்சி இடம்பெறும். (அ)

## நடவடிக்கை

புதுடில்லி, செப்.22 பாரத-நேபாள எல்லையில் கள்ளக்கடத்தலை ஒழித்துக்கட்டத் தீவிரநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

# ஜாப்.-ரஷ்யநட்பை வளர்க்க முயற்சி

டோக்கியோ,செப். 22 சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட சமாதான நட்புறவு உடன்படிக்கையையடுத்து ரஷ்யாவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை நீக்க ஜப்பான் முன்வந்துள்ளது.

நட்புறவை ஏற்படுத்தும் வகையில் ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் திரு. குரேமிக் கோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேற்படி சீன-ஜப்பான் சமாதான நட்புறவுஉடன்படிக்கையின்பின் ரஷ்ய, ஜப்பானிய உயர்மட்ட சந்திப்பு நடத்துவது இதுவே முதல்தடவை என்பத குறிப்பிடத்தககது. [உ]

யாழ்.

## மருத்துவபீடத்தின் புதிய விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

பேராதனை மருத்துவபீடத்தைச் சேர்ந்த உடலமைப்பியல் விரிவுரையாளர் டாக்டர் ப. அம்பிகாபதி யாழ். மருத்துவபீடத்துக்கு உடலமைப்பியற்துறைப் பொறுப்பாளராக மாற்றம் பெற்றுள்ளார். இவர் இலங்கை குடும்பத் திட்டச் சங்க கௌரவ மருத்துவ நிபுணராகவும் கடமையாற்றுகிறார்.

குடும்பத்திட்டம் பற்றிய ஆய்வுரைகள் பல மேற்கொண்டுள்ள இவர், தமிழில் பல மருத்துவக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் கந்தர் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் தம்பதிகளின்கனிஷ்ட புத்திரராவார்.

## பிரி. பிரதமர், ஸாம்பிய ஜனாதிபதியை சந்திப்பார்

லண்டன், செப்.22 ரொடீஷியா மீதான தடை உத்தரவை பிரிட்டிஷ் கம்பனிகள் மீறியதனையடுத்து சீற்றம் கொண்டுள்ள ஸாம்பியா ஜனாதிபதி கலாநிதி கெனத் கௌண்டாவை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் சந்திக்கவிருக்கிறார்.

ரொடீஷியாவுக்கு பிரிட்டிஷ் எண்ணெய்க்கம்பனிகள் எண்ணெய் விநியோகித்ததையடுத்து கலாநிதி கௌண்டா பிரிட்டன் மீது அதிருப்தி கொண்டார்.

பிரிட்டன் தம்மை ஏமாற்றிவிட்டது என்று ஸாம்பிய ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்தே திரு.கலகன் ஸாம்பிய ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார். [உ]

## மின்னொளி கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

### இடைக்காட்டில் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

இடைக்காடு சனசமூகநிலையத்தின் ஆதரவிலான மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இன்றுமாலை மாணிக்க இடைக்காடர் வீதியிலுள்ள நிலைய கரபநதாட்ட அரங்கில் சிறுப்பிட்டி சனசக்தி சனசமூகநிலையமும், உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழகமும், வண்ணார்பண்ணை வள்ளுவர் சனசமூக நிலையமும் தொண்டமானாறு விளையாட்டுக்கழகமும், காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் விளையாட்டுக்கழகமும் மோதவிருக்கின்றன.

இவ்வாட்டங்கள் ஆறுபேர் கொண்டதாக இடம்பெறும்.

நாலுபேர்கொண்டஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழகமும் சிறுப்பிட்டி மக்கள விளையாட்டுக் கழகமும் புத்தூர் ஐக்கிய விளையாட்டுக்கழகமும் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும், தொண்டமானாறு விளையாட்டுக்கழகமும், கதிரிப்பாய் முரசொலி விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.

# "ஹரிஜனரும் அர்ச்சகராக சட்டத்தைத் திருத்துங்கள்"

## மத்திய அரசுக்கு கருணாநிதி வலியுறுத்து

சென்னை, செப்-22 'பெரியார் நூற்றாண்டுவிழா நினைவாக ஹரிஜனங்களும் அர்ச்சகராக வழிவகுக்கும் வகையில் அரசியல்சட்டத்தை திருத்துங்கள்' என்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டுவிழாவில் மத்தியஅரசுக்கு தி.மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி வேண்டுகோள்விடுத்தார்.

விழா விடுதலை சி. வீரமணி தலைமையில் நடைபெற்றது. கலைஞர் மு. கருணாநிதி தொடர்ந்து உரையாற்றுகையில், 'பெரியார்ஒருதனிமனிதரல்ல. அவர் ஒரு சகாப்தம். இந்த சகாப்தம் வரலாற்றில் என்றென்றும் மறைக்கமுடியாத சகாப்தம். பெரியார் இன்று நம்மிடையே இல்லையென்றாலும் அவருடைய உருவம் நம்முன்னால்உலவிடமுடியவில்லையென்றாலும், அவர்நம்முடைய உள்ளத்திலே பதிய வைத்திருக்கின்ற கொள்கை-கோட்பாடு - குறிக்கோள் இவற்றையெல்லாம் அடைவதற்கு பெரியார் வாழ்க... அண்ணா வாழ்க என்று கூறுவதன்மூலம் நமக்கு நாமே புதிய உணர்வுகளை ஏற்படுத்திக்கொண்டு எத்தனை இன்னல்கள், இடையூறுகள் குறுக்கிட்டாலும் யார் யார் நம்மைத் தடுத்துநிறுத்தினாலும் எத்தனை தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டென்று சிரிப்போம் என்ற புரட்சிக்கவிஞரின் பாடலைப் பாடியவாறு தம்முடைய பயணம் தொடரவேண்டும்' என்றார். [உ]

## புதுக்குடியிருப்பில்கைகலப்பு அறுவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

இருசமூகங்களுக்கிடையில் புதுக்குடியிருப்பில் ஏற்பட்ட கைகலப்பு காரணமாக படுகாயமடைந்த அறுவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைகலப்பின்போது பயங்கர ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதால், பலர் வெட்டுக்காயங்களுக்குள்ளானதாக அறியவருகின்றது.

அச்சம்பவத்தில் காயமடைந்த பலர் முல்லைத்தீவில் சிகிச்சை பெற்றனர் முல்லைத்தீவுப் பொலிசார் இது தொடர்பாக தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

செபஸ்தியாம்பிள்ளை, யேசுதாசன், நாகேந்திரன், வேதநாயகம் இராசநாயகம் தம்பிராசா. ஆகியோரே 'வெட்டுக்காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கூ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின்வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. க. பொ. நடனசிகாமணி தலைமையில் இன்று நடைபெறவிருக்கிறது. (உ)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ராமன் தேடிய
சீதை

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Born Black
(Adults Only)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adu'ts only)

தினசரி 4 காட்சிகள் 130-வது தினமாக
**ராணி** (யாழ். நகர்) சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
சாந்தி

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரி
குங்குமம் (புதிய பிரதி)
25 முதல் ஜெய்சங்கர் நீலகிரி எக்ஸ்பிரஸ் (புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா
நடித்த
பொம்மைக்கல்யாணம்
[புத்தம் புதிய பிரதி]

# மாதகல் சம்பவம்: இளம் பெண்ணை பொலிஸார் மீட்டனர்

(பண்டத்தரிப்பு)
18 நாட்களுக்கு முன்னர் மாதகல் கிராமத்தில் நள்ளிரவு வேளையில் வீடொன்றில் புகுந்து துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி பலாத்காரமாக கடத்திச் செல்லப்பட்ட குமாரசாமி அருந்ததி என்னும் இளம் பெண்ணை வியாழக்கிழமை இரவு சங்கானைப் பொலிசார் அளவெட்டியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்டுள்ளார்கள். அத்துடன் இந்த இளம் பெண்ணை கடத்திச் சென்றதாக கூறப்படும் "மகான" என்று அழைக்கப்படும் ஆறுமுகம் மகாதேவன் என்ற வாலிபரையும் அங்கு வைத்து பொலிசார் கைது செய்தனர்.

இரகசிய தகவல் ஒன்றை அடுத்து சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு மிஸ்கின் தலைமையில் சென்ற கோஷ்டி இவர்கள் இருவரையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டுவந்து தீவிரவிசாரணை நடாத்திவருகின்றனர்.

கடத்தப்பட்ட இளம்பெண் அருந்ததி பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில், தான் பலாத்காரமாகவேகடத்திச் செல்லப்பட்டதாக தெரிவித்திருப்பதாக பொலிசார் நமது நிருபருக்கு இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தனர் இந்த இளம் பெண்ணைக் கடத்திச்செல்லும்போது பாவிக்கப்பட்டதாககூறப்படும் துப்பாக்கி தற்போது எங்கு இருக்கிறது என்பது பற்றிய விபரங்களையிட்டு கடத்திச் சென்ற வாலிபரிடம் பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர். இக் கடத்தலில் மேற்படி வாலிபருக்கு உதவி செய்ததாக கூறப்படும் சிலரையும் பொலிசார் கைது செய்யத்தேடி வருகின்றனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# விழிப்புக்குழு மூலம் இலாபம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டதன் மூலம் பெருமளவு இலாபம்கிடைத்துள்ளது என்று சுன்னாகம் தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. எஸ். அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தவறணைப் பகுதியிலும் நால்வர் கொண்ட விழிப்புக்குழு நிறுவப்பட்டதன்பின் மறைவாக கள் விற்பனை செய்யப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்ட தென்றும் தவறணைகளில் கடமையாற்றும் சிட்டைவிகிதர்கள் இனிமேல் கிளைமுகாமையாளர் என அழைக்கப்படுவரென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சங்கமுகாமையாளர் திரு. சி. தங்கவடிவேலுவும் இந்தவகையில் தமது கடமையை மேலும் வலுப்படுத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்திவருகிறார். (உ)

# "கிராமமுன்னேற்றத்தில் இளைஞர் பங்கேற்கவேண்டும்"

(கொக்குவில்)
'ஒவ்வொருகிராமமும் முன்னேற வேண்டுமானால் அவ்வூர் இளைஞர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் அதற்கு ஏதுவான சாதனம், சனசமூக நிலையமே. சனசமூக நிலையம் மூலம் ஒன்றுபட்டு செயல்படும்போது, அரசாங்கமும் தன்னால் இயன்ற உதவியைச் செய்ய முன்வரும். இளைஞர்கள் நினைத்தால், எவ்வளவு பின்தங்கிய கிராமத்தையும் ஒரு அழகாபுரியாக மாற்றி அமைக்கமுடியும்.''

இவ்வாறு, வண்-மேற்கு வள்ளுவன் சனசமூக நிலைய புதிய கட்டடத்தை யாழ். மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

சிவநெறிச் செல்வர் திரு. க, கனகராசா பேசுகையில, "இந்த நாட்டிலுள்ள தூர்ந்துபோன குளங்களை சிரமதான மூலம் செம்பனிட்டு மழை நீரைக் குளங்களில் தேக்கி விவசாயம் செய்வோமானால், இந்நாட்டின் உணவுப் பற்றாக்குறையை நீக்குவதோடு வேலைஇல்லாத் திண்டாட்டத்தையும்போக்கமுடியும்' என்று கூறினார்.

விளையாட்டுத்துறை நிலைவர் திரு. ஞானம் பேசுகையில்; எமது இளைஞர்கள் இச்சனசமூக நிலையத்தை சிரமதான மூலம் கட்டிமுடித்ததுபோன்று ஏனைய சிரமதானங்களிலும் பங்குபற்ற முன்வரவேண்டும் என்றார்.

தொழிலதிபர் திரு க. கனகராசா புதிதாகச் செதுக்கிய வள்ளுவன சிலையைத்திறந்து வைத்ததோடு, மின்னொளி கரபந்தாட்டப் போட்டியையும் ஆரம்பித்துவைத்தார்.

## வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)
2000 தொன்பம்பாய் வெங்காயம்இறக்குமதி செய்யப்படவிருக்கிறது என்று கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் தெரிவித்தது

உள்ளூர் வெங்காயத்திற்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலத்தில் இறக்குமதி வெங்காயம் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. உளுந்து, பயறு என்பன தொடர்ந்து இறக்குமதியாகும். [உ]

# யாழ்ப்பாணம்: 'கிறீன்பீல்ட்' கழக வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா இம்மாதம் 30ம் திகதி சனிக்கிழமையும், அடுத்த மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி மேற்படி கழக வீரர்களிடையே மெய்வல்லுநர்போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, கரபந்தாட்டப்போட்டி, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் உட்பட பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

கிறீன்பீல்ட் கழகம் தனது ஆண்டு விழாவை முன்னிட்டு, வெளிவாரி விளையாட்டுப் போட்டியும், 25 மைல் சயிக்கிள் ஓட்டப்போட்டியும் 10மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழக வீரர்களும் எதுவித நிபந்தனைகளுமின்றி கலந்துகொள்ளலாம் என மேற்படி கழகத்தின் காரியதரிசி, திரு வை. டபிள்யு. ஜீ. ஜீவராசா தெரிவித்தார்.

கிறீன்பீல்ட் கழகத்தின் வருடாந்த விழாவையொட்டி நடைபெறவிருக்கும்இப்போட்டிகள் யாவும்மேற்படி கழக சாலைக்கு முன்பாக உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஆர்.ராதா - பத்மினி
சித்தி

# வேலைநிறுத்தம் முடிவுற்றது

(பண்டத்தரிப்பு)
கடந்த சில நாட்களாக நடைபெற்ற வலி தென்மேற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்துள்ளது

சங்க ஊழியர்களின் தொழிற் சங்கத்திற்கும் நிர்வாகத்தினருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதை அடுத்தே இவ்வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமையல்காரர்களுக்கு சிங்களத்தகைமை விலக்கு

(பண்டத்தரிப்பு)
அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சமையல்காரர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சிங்கள மொழித் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பிலுள்ள சுகாதார இலாகா தலைமைக் காரியாலயம் சுற்றறிக்கை ஒன்றை நாட்டிலுள்ள சகல அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் மாவட்ட சுகாதார சேவை அலுவலகங்களுக்கும் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது. இதுவரை காலமும் சமையல்காரர்களுக்கு ஐந்தாம் வகுப்பு சிங்கள தேர்ச்சி பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்து. சிங்களத் தேர்ச்சியடையாத சமயல் காரர்களின் வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம் என்பன நிறுத்திவைக்கபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த சமையல் காரர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள போதிலும் இவர்கள் எதிர்காலத்தில் வேறு உயர் பதவிகளுக்குச் செல்லும்போது சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் சித்திபெற்றாக வேண்டும் என்று மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மன்னாரில் கொள்ளை

(மன்னார்)
மன்னாரில் உள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு 17,400 ரூபா பெறுமதி மிக்க நகைகள், பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

உதுமான்லெப்பை என்பவரது வீட்டில் நிகழ்ந்துள்ள இத்துணிகரக் கொள்ளை மன்னார் பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர். (உ)

என்றுவரும் என நாளை எண்ணிக் காத்திருந்த ரசிகர்களின் நெஞ்சம்தனை கொள்ளை கொள்ள யாழ்.நகரில் இதுவே கடைசிமுறையாக மீண்டும் சிம்மக்குரலோனின் சிற்றம் வெண்திரையில்

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன் கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா (புத்தம் புதிய பிரதி)
ஃ பொறுத்ததுபோதும் பொங்கிஎழு மகனே!
ஃ இது உன் தாயின் ஆணை!
ஃ என்னை அழைத்துவரவில்லை சங்கிலியால் கட்டி சபைநடுவே இழுத்துவந்துள்ளார்கள் தந்தையே!
கதை-வசனம் முத்தமிழ்காவலன் கலைஞர் கருணாநிதி

# யாழ். நகரில் ரூபா 30,000 கடத்தல் புடவை வேட்டை

(யாழ்ப்பாணம்)

சுங்கப் பகுதியினர், நேற்று மாலை யாழ்நகரில் நடாத்திய திடீர்ச் சோதனையில் முப்பதி னாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் துணி வகைகளைக் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணச் சுங்கப் பரிசோதகர் திரு. ரி. பவளராஜா தலைமையில், திருவாளர்கள் கே. ராசரத்தினம், சி, பாக்கியராஜன், ஏ. யேசுதாசன், ஏ. எப். எஸ். மார்சியஸ் ஆகியோரடங்கிய குழு திடீர் வேட்டையை நடாத்தியது.

யாழ்ப்பாணம் சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த அடைவுகடையொன்றில் 10,000 ரூபா பெறுமதியான மணிப்புரி, காஞ்சிபுரம் சாறிகளைக் கைப்பற்றியதுடன் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதிக்கடையொன்றில் 20,000 ரூபா பெறுமதியான மணிப்புரி சாறிகள், சாரங்கள், வேட்டிகளைக் கைப்பற்றியதுடன் அங்கும் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களும், கைதுசெய்யப்பட்ட நபர்களும் சுங்க உதவிச் சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கப்டுள்ளனர். விசாரணை தொடர்கிறது. (கெ-இ)

# வேலைநிறுத்தத்தை அரசு ஒரு யுத்தமாகவே கருதுகிறது

## திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடக்கும் என்றும் கூறுகிறார் அலவி மௌலானா

(கொழும்பு)

''உத்தேச வேலைநிறுத்தத்தை அரசாங்கம் ஒரு யுத்தமாகவே கருதுகிறது. வேலைநிறுத்தஞ் செய்வது, ஜனநாயக உரிமைகளில் ஒன்று. இந்த உரிமை எமக்கு மறுக்கப்படுகிறது. எவ்வாறாயினும் திட்டமிட்டபடி அடையாள வேலைநிறுத்தம் நடைபெற்றே தீரும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் ஜனாப் அலவி மௌலானா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

''வேலைநிறுத்த நடவடிக்கை ஜனநாயகத்திற்கும் புதிய அரசியலமைப்புத் திட்டத்திற்கும் முரணென்று அரசு அறிவித்துள்ளது. ஆனால் எந்தச் சட்டத்தின்கீழ் இவ் வேலைநிறுத்தம் அரசியல் அமைப்புக்கும் ஜனநாயகத்திற்கும் முரண் என்பது எனக்குத் தெரியவில்லை என்று ஜனாப் மௌலானா தெரிவித்துள்ளார்

இன்றைய நிலை குறித்து இன்று கொழும்பு கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் கூடி ஆராயப்படும் என்றும், நாளை ஞாயிற்றுக்கிழமை ஹைட்பார்க்கில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும் என்றம் ஜனாப் மௌலானா தெரிவித்தார். (ம-இ)

## சித்தாந்த விளக்கிற்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

களின் நோக்கம் ஆன்மாவை இறைவனோடு சேர்த்தலே என்றும் செம்பொருள்நூலில் பல இடங்களில் வந்து ஒதுப்பட்டிருப்பது போற்றுதற்கரியது. சிவபூசையென்றாலென்ன, பூர்வ,அபூர்வக் கிரியைகளென்றாலென்ன? இந்நோக்கத்தோடோயே அமைக்கப்பெற்றுள்ளதென்பதை நன்கு விளக்கியுள்ளார்.

சைவக் கிரியைகளுக்கெல்லாம்அடிப்படை சுத்தம். அகச்சுத்தம், புறச்சுத்தம் முதலியவற்றைக் கவனிக்காதுசெய்யப்படும் கிரியைகளுக்குப் பயன் கிடையாதென்பது இந்நூலில் வற்புறுத்தப்பட்டுள்ளது. பஞ்சமகாபாதகங்களை விலக்காதவர்களுக்கு எப்படிச் சுத்தமேற்படும்? இந்நூலில் விரிவாக குறிப்பிடப்படாத ஆசௌசம் என்பதும் சுத்தத்தின் அடிப்படையில் எழுந்ததெனலாம். கிரியைசெய்யும் ஆச்சாரியாரைச் சிவமயமாக்கும். பூதசுத்திபற்றியும், மந்திரசுத்தி, லிங்கசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி முதலியனபற்றியும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் காமியக்கிரியைகள்பற்றிக் கூறியிருப்பதை முற்றாக ஏற்கமுடியாமலிருக்கிறது. மனிதரில் பெரும்பாலோர் மோட்சத்தைநாடும் நிலையில்லை. அவர்கள் பொன்னையும், பொருளையும், போகத்தையும் விரும்பி இறைவனை வேண்டுதல் செய்வதை பிழையெனக்கொள்ளலாகாது! சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மாரே பொன்,பொருள் போகம்வேண்டி இறைவனை வலிந்துபாடி அவற்றைப்பெற்றனரென்றால், இவற்றை வேண்டும் மக்களைக் குறைகூறலாமா?

இந்நூலில் பூர்வக்கிரியைகள், அபரக்கிரியைகள் என்பனவும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அபரக்கிரியை பற்றிக் கூறியிருப்பதே சிறப்பாக அமைந்துள்ளது. அபரக்கிரியையில் சுண்ணமிடிப்பதையும் அப்பொழுது திருபொற்சுண்ணப் பாடல்கள் பாடப்படுவதையும் ஆதரித்தெழுதியிருப்பது கவனிக்கத்தக்கது

இச்சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கோயிற் கிரியைகளில் மக்கள் ஈடுபாடு கொள்ளவேண்டுமானால் அவற்றில் தமிழுக்குப் போதிய இடம் கொடுபடவேண்டும், இதனால் வடமொழி மந்திரங்கள் புறக்கணிக்கப்படவேண்டுமென்று கருதவேண்டாம். வடமொழி மந்திரங்களை வைத்துக்கொண்டு தமிழை எவ்வாறு கையாளலாம் என்பதை சிவாச்சாரியார்கள் சிந்திக்க வேண்டும். சிவபூசை முழுவதையும் தேவாரம் மூலம் நடத்துவதற்கு ஒரு மரபுண்டு. இதற்காகப் பொருத்தமான தேவாரங்களைத் தெரிந்து பக்தரீதியாக நாவலர் போன்றோர் அமைத்துள்ளார்கள். காலஞ்சென்ற முதுபெரும் சைவக் குருக்களான செல்லையாக்குருக்கள் தேவாரங்களைக்கொண்டே சிவபூசை செய்ததைக் கண்டுள்ளேன்.

ஒருமுறை ஒரு கோயில் கும்பாபிஷேகம் முடிந்ததும், எனது மதிப்புக்கும், அன்புக்குமுரிய சாஸ்திரிகள் ஒருவர் வடமொழி சுலோகங்களை ஆதாரமாகக் கொண்டு ஆசியுரை வழங்கினார். இறுதியில் ''சர்வேஜனு சுகினோபவந்து சர்வமங்களானிபவந்து' (எல்லாச் சனங்களும் சுகவான்கள் ஆகட்டும், எல்லா மங்களங்களும் ஆகட்டும்) எனக் கூறி முடித்தார். அடுத்து என்னைப் பேசும்படி கேட்டனர். அப்பொழுது நான் பின்வரும் சம்பந்தர் தேவாரத்தை எடுத்துக்காட்டி, சாஸ்திரிகள் கூறிய கருத்துக்களெல்லாம் அதில் அமைந்திருப்பதை விளக்கினேன்.

வாழ்க அந்தணர் வானவ ராஇனம்  
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக  
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே  
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே.

இப்படிப் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கு உபயோகப்படுத்தப்படக்கூடிய தேவாரப் பாடல்களுமுண்டு. அவற்றைத் தக்கமுறையில் உபயோகித்தல் சிவாச்சாரியர்களினதும், சைவப் பெரியார்களதும் கடமையாகும்.

ச. அம்பிகைபாகன்

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் சிவஞானம்

இளைப்பாறிய கட்டிடத் திணைக்கள D. O. A. சிவஞானம் சிவபதமடைந்துவிட்டார். இவர் அன்னபூரணியின் அன்புக் கணவரும், சிவராமலிங்கத்தின் சகோதரரும், சிவராஜன், சிவகுமாரன், DR. சிவபாலன், சிவகாந்தன், சிவதாரிணி ஆகியோரின் அன்புத்தந்தையும், தவமலர், நாகஈஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு செம்மணியில், நடைபெறும்.

28, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

0402

## வேலணையில் இன்று

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் இன்று காலை வேலணை கமதொழிலாளர் கழக ஆதரவில் விவசாயக் கருத்தரங்கும், கலந்துரையாடலும் திரு. எஸ். கந்தையா தலைமையில் நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராகக் காவலூர் எம். பி. திரு. கா. பொ இரத்தினம் கலந்துகொள்வார்.

திருவாளர்கள் சிவமுத்துலிங்கம், தம்பிமுத்து, இராஜரத்தினம், லூயிஸ் உட்பட பலர் உரையாற்றுவர்.

இதற்கான ஏற்பாட்டினை மேற்படி கழக முக்கியஸ்தர் திரு. என். கனகசபாபதி செய்துள்ளார். (உ)

## 'யாழ்ப்பாண அரசு' நூல்வெளியீடு

(கொழும்பு)

கலாநிதி சி. பத்மநாதன் எழுதிய 'கிங்டம் ஒப் ஜப்னா' (யாழ்ப்பாண அரசு) என்ற ஆங்கில நூல் இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையினரால் வெளியிடப்படுகிறது.

கலாநிதி பொ. பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டுவிழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம. சிவசிதம்பரம் நூலை வெளியிட்டுவைப்பார்.

நூலின் முதற்பிரதிகளை திருவாளர்கள் வி. எஸ். துரைராஜா, இ. சிறினிவாசன் ஆகியோர் பெறுவர்.

ஜேம்ஸ் ரி. இரத்தினம் கலாநிதி கே. எஸ், நடராஜா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

திருமலை எம்.பி. திரு. இராசம்பந்தன், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன், முன்னாள் செனட்டர் எஸ். நடராஜா, சு. பாலசோதி, கலாநிதி சிவராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். திரு. ஈழவேந்தன் வரவேற்புரை நிகழ்த்துவர். (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered as a Newspaper in Srilanka

## திட்டமிட்டபடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் கூட்டு நடவடிக்கைக் குழு மத்தியின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், இதனை ஒரு பொதுக் கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மேற்கூறப்பட்ட தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியையும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தையும் இந்த உத்தேச அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறும், தொடர்ந்தும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைச் குழுவுடன் இயங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (கூ-இ)

## ஜனாதிபதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நீதிமன்றப் பதிவாளரிடம் ஜனாதிபதி கமிஷன் தலைவரும் மற்றுமிரு உறுப்பினர்களும் மனு சமர்ப்பிக்கலாமென்றும் மேன்முறையீட்டு நீதியரசர்கள் நேற்று அறிவித்தனர்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் மனு மீதான விசாரணைகள் அக்டோபர் மாதம் 16ந் திகதி முதல் 3 தினங்கள் நடைபெறுமென்றும் நீதியரசர்கள் அறிவித்தனர். (ம.இ)

## எதிர்க்கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையை நேற்று முன்தினம் பிற்பகல் 2-15க்கு ஒத்திவைத்தபோதே இச்சோதனை இடம்பெற்றது.

சபை ஒத்திவைத்ததை அடுத்து பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் கலரியிலும் பிரமுகர்கள் கலரியிலும் இருந்தவர்களும் வெளியேற்றப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

இதனை அடுத்தே பாராளுமன்றக் கட்டிடத்திலிருந்த அரசாங்க காரியாலயங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. (ம-)

## இன்று வருகிறார்

(கொழும்பு)

பெரியார் ஈ. வே. ராவின், தொண்டரும், திராவிடர் கழகத்தின் செலாளருமான திரு கி. வீரமணி இன்று இலங்கை வருகின்றார்.

இவர் ஒருவாரம் இலங்கையில் தங்கியிருப்பார். இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில். பெரியார் ஈ.வே.ராவின் நூற்றுண்டு விழாக்களில் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கலந்துகொள்வார். (கெ:இ)

## இன்றைய இல்லப்போட்டி

(திருநெல்வேலி)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டி, இன்று மாலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

விழாவில் நல்லூர் எம். பியும் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் (இ)

## வேலை நிறுத்தம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரசுரங்களில் பிரசுரித்துள்ளனர். இந்நிலையிலும் வேலை நிறுத்தம் அரசியல்நோக்கம் கொண்டதல்ல என்று கூறமுடியுமா

அதிகாரமமதையில் நாம் வேலைநிறுத்தத்துக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. தொழிலாளவர்க்கத்தினர் இந்நாட்டில் 12 வீதத்தினரே ஏனைய மக்கள் எம்மைக் குறைகூறுவார்களே.

அரசியல் அமைப்புச்சட்டம் அமுல் செய்யப்பட்ட தினத்தன்று விமானத்தில் குண்டு வெடுக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாகவே அவ்விமானப் புறப்படுவதில் தாமதமாகியது கொழும்பு மாநகருக்குமேல் குண்டுவெடித்தது.

அதுவும் ஒரு பெற்றோல் நிலையத்தின்மேல் விழுந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

மக்களை இந்த நாட்டை முன்னேற்றும் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். நாட்டை முன்னேற்றச் சந்தர்ப்பம் தாருங்கள்.

எனவேதான் கேட்கிறோம் வேலைநிறுத்தத்தை கைவிட்டு வீணான குழப்பங்களைத் தவிர்த்து விடுங்கள், ]ம-இ]

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா வள்ளியம்மைப்பிள்ளை

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பிரபல வைத்தியர் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கந்தையாவின் கனிஷ்ட புதல்வியும். காலஞ்சென்ற வைத்தியபூபதி ஏ.சி.இராசையா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மீனாம்பாள் முத்தையா, திருமதி சிவசக்தி குகமூர்த்தி ஆகியோரின் அருமைத்தாயாரும், பகிரங்க வேலைப்பகுதி காலஞ்சென்ற ச. முத்தையா, வைத்தியாச்சாரி வே. குகமூர்த்தி ஆகியோரின் மாமியாருமாகிய வள்ளியம்மைப்பிள்ளை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று [23-09-78] சனிக்கிழமை பிர்பகல் 3மணிக்கு 259, நாவலர்வீதியிலுள்ள கந்தையா வளவு இல்லத்திலிருந்து, கோம்பயன் மணல் மயானத்திற்கு ஈமைக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

—தகவல் வைத்தியாச்சாரி வே.குகமூர்த்தி.

0407